02.03.2026

அ.வ.எண். 1075/2017

பி.சா.1 – திருமதி.புஷ்பா, க/பெ. சதாசிவம்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 02.03.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது கணவர் 13.12.2024 ல் இறந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றும், எனது கணவர் 13.12.2014 ல் தான் இறந்தார் என்றால் சரிதான். நான் 2014 ம் ஆண்டு கட்டிடம் கட்ட முயற்சி செய்தேன் என்றும், அப்போது என் கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் 2014 ம் ஆண்டு கட்டிடம் கட்ட முயற்சி செய்ததாக எனது எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்தின் நீள, அகலம் தெரியுமா என்றால் தெரியாது. 3 சென்ட் என்பது தான் தெரியும்.

2. தாவா சொத்து கிரயம் பெற்றது முதல் நாளது தேதி வரை சொத்தின் சுவாதீனத்திற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2014 ம் ஆண்டில், நாங்கள் கட்டிடம் கட்ட முயற்சி செய்தபோது வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், அப்போது தான் பிரதிவாதியாகிய நான் தாவா சொத்தை கிரயம் பெற்ற விவரம் வாதிக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனம் வாதியிடம் உள்ளது என்றும், அதை மீட்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

3. என் பெயரில் உள்ள கிரய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உண்மை தன்மையை நிரூபிக்க தவறிவிட்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளின் சுவாதீனத்தில் உள்ளதால் என் பெயரில் உள்ள கிரய ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்பதால், செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 கிரய ஆவணம், நடைமுறைப்படுத்தாத ஆவணம் என்பதால் அதை கொண்டு வில்லங்க விவகாரம் ஏற்படுத்த முடியாது என்றால் சரியல்ல. வாதிகள் 13.10.2014 தேதியில் வில்லங்க சான்றிதழ் என் பெயரில் உள்ள கிரய விவரம் தெரிய

வந்தது என்றும், எனவே உடனடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur